[1983 பிப்ரவரி 11

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும் கடனுதவி

*வினா எண். 236—திரு. வேடசந்தூர் வி. பி, பாலசுப்பிரமனியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக கழகம் புதிதாக தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு வாங்கப்படும் புதிய இயந்திரங்களுக்கு மட்டுமே கடன் வழங்குகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதை மாற்ற அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் பொதுவாக உபயோகப்படுத்தப்பட்ட இயந்திர தளவாடங்களை வாங்குவதற்கு தொழிற்சாலைகளுக்கு கடனுதவி வழங்குவதில்லை. எனினும், தொழில்களுக்கு தேர்வு அடிப்படையில் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியால் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் உபயோகப்படுத்தப்பட்ட இயந்திர தளவாடங்களை வாங்குவதற்கு கடனுதவி அளித்து வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட இயந்திரங்கள் கிடைக்காத நிலை இருப்பதன் காரணமாக பல ஆயிரக்கணக்கில் தொழில்கள் தொடங்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக வேடசந்தூர் தொகுதியிலும் திண்டுக்கல் பகுதியிலும் 15-க்கும் மேற்பட்ட நூற்பாலைகள் இருக்கின்றன. அவர்கள் நூற்பாலைகள் ஆரம்பிப்பதற்கான லைசன்சுகளை வாங்கி வைத்து இரண்டாண்டுகள் ஆகியும் கூட தொழிலை தொடங்க முடியாத நிலை இருக்கிறது. ஏன் என்றால், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் புதியதாக வாங்கப்படும் இயந்திரங்களுக்கே கடன் கொடுக்க முன் வருவதால் பழைய இயந்திரங்கள் மிக சகாய விலைக்கு வந்தாலும் கூட வடநாட்டிலுள்ள பெரிய மில்காரர்கள் இந்த மில்களுக்கு வேண்டிய இயந்திரங்களை வாங்கி ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள்ளாக விற்பனை செய்கின்றனர். ஆகவே அத்தகைய இயந்திரங்களை வாங்க முடியாத நிலை ஏற்படுகிறது.

எனவே ஒரு குறிப்பிட்ட காலம் நிர்ணயித்து இவ்வளவு ஆண்டுகளுக்குள் இருந்தால் பழைய இயந்திரங்களை வாங்கினாலும் கடன் கொடுக்கப்படும் என்கிற வகையில் கொடுப்பதற்கு அரசு முன்வருமா, பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக செகண்ட் ஹேண்ட் மெஷின்கள் வாங்குவதற்கு ஐ.டி.பி.ஐ. நிறுவனம் அனுமதி வழங்குவதில்லை. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் நாம்

கொடுக்கும் கடன்களை ஐ.டி.பி.ஐ. ரிபைனான்ஸ் செய்கிறது. ஆனால் ஒட்டு மொத்தமாக எல்லா தொழிற்சாலைகளிலும் செகண்ட் ஹேண்ட் மெஷின்களை உபயோகப்படுத்தக் கூடாது என்று ஐ.டி.பி.ஐ. நிறுவனம் முடிவெடுத்திருக்கிறது. ஆனால் நூற்பாலைகளுக்கு உபயோகப்படுகிற இந்த மஷின்களுக்கு மட்டும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல செகண்ட் ஹேண்ட் மெஷினை உபயோகப்படுத்த முடியுமா என்பது குறித்து, அதனுடைய தரம் எவ்வளவு ஆண்டுக்கு முன் வாங்கப்பட்டது, எவ்வளவு நாட்கள் பயன்படுத்தப்பட்டது, இன்னும் எவ்வளவு ஆண்டுகள் ரிப்பேர் ஆகாமல் உபயோகப்படுத்த முடியும். அப்படி செகண்ட் ஹாண்ட் மிஷின் போடுவதன் மூலம் ப்ராஜக்ட் காஸ்ட் எவ்வளவாகும், புது மிஷினுக்கும் பழைய மிஷினுக்கும் உள்ள டிஃபரன்ஸ் எவ்வளவு என்பதைப்பற்றி எல்லாம் ஆய்ந்த பிறகுதான் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் அதனை ஆய்வு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, இந்தத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக ஒரு சில தொழில்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் மருத்துவத் தொழிலைச் செய்கின்ற மருத்துவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ஏதாவது கடன்கள் வழங்க அரசு ஆலோசனை செய்திருக்கின்றதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் தொழிலுக்கு பொதுவாக டிஸ்பென்சரி கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒருசில பேர் மனு செய்திருந்ததாகத் தெரிகிறது. ஆனால் ஒரு தொழில் என்ற வரம்புக்குள்ளே டிஸ்பென்சரி கட்டிடம் கட்டுவது வரவில்லை, எனவே ஐ. டீ. பீ. எல். நிறுவனம் அதற்கு ரீஃபைனான்ஸ் கொடுப்பதில்லை. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமும் அதற்குக் கடன் வழங்குவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண். 237—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழில்துறையில் தகுந்த தொழில் நுணுக்க ஆலோசனை வழங்குவதற்கான நிலையம் ஒன்று நிறுவும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு மதிப்பீடு, எப்பொழுது செயலுக்கு வரும்?